**100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் - ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து**

# திருச்சி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட, 8 ஒன்றியங்களில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிவிப்பு!



100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டுவந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டங்களை நாளை (24.12.2025) காலை நடத்திட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி திருச்சி தெற்கு மாவட்டத்தில் உள்ள 8 ஒன்றியங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சிகளின் சார்பில் நாளை (24.12.2025 - புதன்கிழமை), காலை 10 மணியளவில், கீழ்க்கண்ட விவரப்படி ஒன்றிய பா.ஜ.க.அரசையும், அ.தி.மு.க. வையும் கண்டித்து கீழ்க்கண்ட இடங்களில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற உள்ளது.

| ஒன்றியம் பெயர் | ஒன்றிய கழக செயலாளர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் ஏற்பாட்டாளர்கள் | தலைமை | கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| திருவெறும்பூர் தெற்கு | சி.கங்காதரன் | வண்ணை அரங்கநாதன் | குண்டூர் ஊராட்சி |
| திருவெறும்பூர் வடக்கு | கே.எஸ்.எம்.கருணாநிதி | கே.என்.சேகரன் | வாழவந்தான் கோட்டை ஊராட்சி |
| மணப்பாறை | சி.ராமசாமி | கவிஞர் சல்மா | பன்னாங்கொம்பு ஊராட்சி |
| மருங்காபுரி வடக்கு | சி.செல்வராஜ் | பி.எம்.சபியுல்லா | வேம்பனூர் ஊராட்சி |
| மருங்காபுரி தெற்கு | சி.சின்ன அடைக்கண் | இரா.மூக்கன் | செவல்பட்டி ஊராட்சி |
| மருங்காபுரி மத்தியம் | எம்.பழனியாண்டி | என்.கோவிந்தராஜ் | கவுண்டம்பட்டி ஊராட்சி |
| வையம்பட்டி வடக்கு | ஆர்.சீரங்கன் | அ.த.த.செங்குட்டுவன் | V.பெரியப்பட்டி பூலாம்பட்டி ஊராட்சி |
| வையம்பட்டி தெற்கு | வி.ஏ.ராஜேந்திரன் | இரா.குணசேகரன் | எலமணம் ஊராட்சி |

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் திருச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட ஒன்றிய, கிளை கழகச் செயலாளர்கள் நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாகமுகவர்கள், கழகமுன்னோடிகள் அந்தந்த ஒன்றியங்களில் உள்ள மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் அனைவரையும் அழைத்து பேசி முறையாக ஆர்ப்பாட்டம் பற்றி துண்டறிக்கையை அச்சிட்டு, நம்முடைய கழக நிர்வாகிகள், கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகளுக்கு தந்து அனைவரையும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்க உரிய ஏற்பாடுகளை செய்து வெற்றிகரமாக இக்கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்திட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி,**
செயலாளர்
திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க.

22-ம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம் 05-03-1944

மறைவு 23-12-2003

# எவரெஸ்ட் கோ.நடராசன்

முன்னாள் திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. துணை செயலாளர்,
முன்னாள் தி.மு.க. நகர செயலாளர்,
முன்னாள் காமராஜ் கூட்டுறவு நகர வங்கி தலைவர்,
முன்னாள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி தலைவர்,
மாவட்ட ஓட்டல் உரிமையாளர்கள் சங்க துணை தலைவர்

**புன்னகையின் பூந்தோட்டமே ! அன்பின் பிறப்பிடமே !**
**மண்ணுலகிலிருந்து மறைந்தீர் நீர் !**
**என்றும் எங்கள் நெஞ்சில் நிறைந்தீர் நீர் ! !**
**உங்கள் ஆசியோடு என்றும் தாங்கள் காட்டிய**
மாண்புமிகு முதல்வர் **தளபதியார்,** மாண்புமிகு துணை முதல்வர் **உதயநிதிஸ்டாலின்**
மாண்புமிகு அண்ணன் **எ.வ.வேலு** அவர்களின் வழி நடப்போம்

என்றும் உங்கள் நினைவுகளுடன்...

எவரெஸ்ட் **ந.உமாசங்கர்** D.M.E., எவரெஸ்ட் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்

எவரெஸ்ட் **ந.நரேஷ்குமார்** B.Sc.,LL.B., மாவட்ட தி.மு.க. இளைஞரணி அமைப்பாளர் திருவண்ணாமலை (வடக்கு)

எவரெஸ்ட் **ந.நவீன்குமார்** B.A.B.L., அரசு வழக்கறிஞர், நோட்டரி பப்ளிக்

மற்றும் **குடும்பத்தினர்** போளூர் – திருவண்ணாமலை மாவட்டம்.

**100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் - ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து**

# விழுப்புரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றியங்களில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் கே.எஸ்.செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் படி துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்படி 100 நாள் வேலைத்திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தைக் கொண்டு வந்த ஒன்றிய பா.ஜ.க. அரசையும் இதற்கு ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள அனைத்து ஒன்றியங்களிலும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் சார்பில் நாளை (24.12.2025 - புதன்கிழமை) காலை 10 மணி அளவில், மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் மாநில, மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் தலைமையில் நடைபெறும் என மாவட்ட பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் - செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிவித்துள்ளார்.

அதன் விவரம் வருமாறு:-

| வ. எண் | ஒன்றியம் | கண்டன உரை |
|---|---|---|
| 1 | செஞ்சி | செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ. மாவட்ட கழக செயலாளர், விழுப்புரம் வடக்கு மாவட்டம் |
| 2 | மேல்மலையனூர் | ப.செந்தமிழ்ச்செல்வன் மாநில விவசாய அணி இணை செயலாளர் |
| 3 | வல்லம் | டாக்டர் ப.சேகர் மாவட்ட அவைத்தலைவர் |
| | | செஞ்சி சிவா மாநில தீர்மானக் குழு உறுப்பினர் |
| | | திருமதி.அமுதா ரவிக்குமார் மாவட்ட துணை செயலாளர் |
| 4 | மயிலம் | டாக்டர் R.மாசிலாமணி மாநில தீர்மானக் குழு துணை தலைவர் |
| | | அருணகிரி மாவட்ட துணை செயலாளர் |
| 5 | ஒலக்கூர் | ஆசிரியர் எம்.கண்ணன் திண்டிவனம் நகர செயலாளர் |
| | | சீனுராஜ் தலைமைச் செயற்குழு உறுப்பினர் |
| 6 | மரக்காணம் | ரமணன் மாவட்ட பொருளாளர் |
| | | ரவிக்குமார் மாவட்ட துணை செயலாளர் |

**செஞ்சி கே.எஸ்.மஸ்தான் எம்.எல்.ஏ.,**
பொறுப்பாளர்
விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க.

**100 நாள் வேலைத் திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டுவந்த ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசையும் – ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து**

# வேலூர் தெற்கு மாவட்டத்தில் கண்டன ஆர்ப்பாட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை கொண்டுவந்த ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசையும் - ஒத்து ஊதும் அ.தி.மு.க.வையும் கண்டித்து நாளை (24.12.2025 - புதன்கிழமை) காலை 10.00 மணியளவில் வேலூர் தெற்கு மாவட்ட மத சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கீழ்க்கண்ட அட்டவணையின்படி ஊராட்சி ஒன்றியங்களில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும் என மாவட்டச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ அறிவித்துள்ளார்.

அதன் விவரம் பின்வருமாறு:-

| வ.எண் | தொகுதி | ஒன்றியம் | நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 1 | அணைக்கட்டு | அணைக்கட்டு மேற்கு<br>அணைக்கட்டு கிழக்கு<br>அணைக்கட்டு மத்தியம்<br>அணைக்கட்டு தெற்கு | ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில் அணைக்கட்டு |
| 2 | அணைக்கட்டு | வேலூர் ஒன்றியம் | ஊராட்சி ஒன்றிய அலுவலகம் வேலூர் |
| 3 | அணைக்கட்டு | கணியம்பாடி தெற்கு ஒன்றியம் | ஊராட்சி ஒன்றிய அலுவலகம் கணியம்பாடி |
| 4 | குடியாத்தம் | பேர்ணாம்பட்டு கிழக்கு<br>பேர்ணாம்பட்டு மேற்கு<br>பேர்ணாம்பட்டு தெற்கு | ஊராட்சி ஒன்றிய அலுவலகம் பேர்ணாம்பட்டு |
| 5 | குடியாத்தம் | குடியாத்தம் மேற்கு | ஊராட்சி ஒன்றிய அலுவலகம், குடியாத்தம் |

மேற்படி அட்டவணையின்படி நடைபெற உள்ள கண்டன ஆர்ப்பாட்டத்தில் அந்தந்த ஒன்றியத்திற்கு உட்பட்ட மாவட்ட, ஒன்றிய, தலைமைச் செயற்குழு, பொதுக்குழு நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாநில, மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கிளைக்கழக நிர்வாகிகள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் மற்றும் மத சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துகொண்டு ஆர்ப்பாட்டம் வெற்றிபெற செய்திட வேண்டுமாய் வேண்டுகிறோம்.

**ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ.**
செயலாளர்
வேலூர் தெற்கு மாவட்ட தி.மு.க.